## August 31, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. லிபுலேக் கணவாய் வழியாக எல்லை தாண்டி வர்த்தகம் மேற்கொள்ள இந்தியா-சீனா இடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டுக்கு சீன அதிபர் ஷி ஜின்பிங்கிடம் நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலி ஆட்சேபம் தெரிவித்தார்.
   i. உத்தரகண்டில் உள்ள லிபுலேக் கணவாய் வழியாக எல்லை தாண்டிய வர்த்தகத்தை மீண்டும் தொடங்க இந்தியாவும் சீனாவும் அண்மையில் முடிவு செய்தன.
   ii. இதற்கு ஆட்சேபம் தெரிவித்த நேபாளம், லிபுலேக் கணவாய் அந்நாட்டுக்குச் சொந்தமானது என்று உரிமை கோரியுள்ளது. ஆனால் அதற்கு ஆதாரம் இல்லை என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்தது.
   iii. இந்நிலையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்க நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலி சீனா சென்றுள்ளார். அங்குள்ள தியான்ஜின் நகரில் சீன அதிபர் ஷி ஜின்பிங்கை சர்மா ஒலி சந்தித்து பேசினார். அப்போது லிபுலேக் கணவாய் வழியாக எல்லை தாண்டி வர்த்தகம் மேற் கொள்ள இந்தியா- சீனா இடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டுக்கு ஜின்பிங்கிடம் சர்மா ஒலி ஆட்சேபம் தெரிவித்தார்.
   iv. இந்த விவகாரத்தில் நேபாளத்துக்கு சீனா ஒத்துழைக்கும் என்று நம்புவதாக சர்மா ஒலி கூறினார் என்று நேபாள பிரதமர் செயலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டது. எனினும் இதுகுறித்து சீனா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.
2. நாட்டில் விமான நிலையங்களுக்கு அருகிலுள்ள கட்டடங்களின் உயரக் கட்டுப்பாடுகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ஐசிஏஓ) உதவியுடன் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு தெரிவித்தார். ஹாங்காங் போன்ற பிற சர்வதேச நகரங்களில் இந்தச் சிக்கல்கள் எவ்வாறு கையாளப்படும் என்பது ஆராயப்படும்.
3. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி சீனாவின் தியான்ஜின் நகருக்குச் வந்தடைந்தார்.
   i. பிரதமர் மோடி கடைசியாக கடந்த 2018, ஜூனில் எஸ்சிஓ உச்சி மாநாட்டில் பங்கேற்க சீனாவுக்கு வந்தார்.
   ii. இந்நிலையில், எஸ்சிஓ மாநாட்டுக்கிடையே ரஷிய அதிபர் புதின் உள்ளிட்ட பல உலக தலைவர்களையும் பிரதமர் மோடி சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
   iii. இந்தியா மீதான அமெரிக்காவின் வரி விதிப்பால் இருதரப்பு உறவில் சலசலப்பு நிலவும் சூழலில், பிரதமரின் சீனப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

iv. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆரோக்கியமான விகிதத்தில் வளர்ந்து வந்தாலும், வர்த்தக இடைவெளி இன்னும் சீனாவுக்குச் சாதகமாகவே உள்ளது.

v. கடந்த நிதியாண்டில் இந்தியாவின் மொத்த வர்த்தக ஏற்றத்தாழ்வில் (28,300 கோடி டாலர்) சீனாவுடனான வர்த்தகப் பற்றாக்குறை மட்டும் சுமார் 35 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

4. அமெரிக்காவின் வரி விதிப்பு உயர்வால், தமிழ் நாட்டில் 4 துறைகளின் செயல்பாடுகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக நிதித் துறை முதன்மைச் செயலர் த.உதயச்சந்திரன் தெரிவித்தார்.
   i. அமெரிக்காவின் புதிய வரி விதிப்பால், தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில், ஆட்டோ உதிரிபாகங்கள் உற்பத்தி, கடல்சார் பொருள்கள், காலணி உற்பத்தி ஆகியவற்றில் பாதிப்புகள் ஏற்படக்கூடும்.
   ii. சாதகமான முயற்சிகளை மேற்கொண்டால் நிலைமை சரியாகிவிடும் என்ற நம்பிக்கைக்கான ஒளிகீற்று தெரிகிறது என்று அவர் தெரிவித்தார்.

5. பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் வகையில், பல நாடுகளின் பொருள்கள் மீது வரி விதிக்க அமெரிக்கபர் டிரம்ப்புக்கு சட்டபூர்வ உரிமையில்லை என்று அந்நாட்டு மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
   i. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருள்கள் மீது 25% வரி, ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அதிருப்தி தெரிவித்து, இந்திய பொருள்கள் மீது கூடுதலாக 25% வரி என மொத்தம் 50 % வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்தார். இது போல பல்வேறு நாடுகளின் பொருள்கள் மீது அமெரிக்கா பரஸ்பரம் அதிக வரி விதித்துள்ளது.
   ii. இந்த வரி விதிப்பு சர்வதேச சந்தைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இந்த நடவடிக்கை அமெரிக்காவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் நாடுகளுக்கு பெரும்சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.
   iii. இந்தநடவடிக்கை தொடர்பான வழக்கில், வாஷிங்டனில் உள்ள மேல்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 'அமெரிக்காவில் தேசிய அவசரநிலைகளை அறிவிக்கவும், கிட்டத்தட்ட உலகில் உள்ள அனைத்து நாடுகளின் பொருள்கள் மீது பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் இறக்குமதி வரிகளை விதிக்கவும் அதிபர் டிரம்ப்புக்கு சட்டபூர்வ உரிமையில்லை.

6. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அடுத்த மாதம் நடை பெறவிருக்கும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் பங்கேற்பதற்கு அந்த நாடு தடை விதித்துள்ளது.
   i. இஸ்ரேல் மற்றும் தங்களின் கடும் எதிர்ப்பை மீறி அந்தக் கூட்டத்தில் பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அந்தஸ்து அளிக்கவிருப்பதாக பிரான்ஸ், கனடா,

பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 15 நாடுகள் தெரிவித்துள்ள சூழலில், அதைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ii. பாலஸ்தீன விடுதலை அமைப்பு (பிஎல்ஓ) மற்றும் பாலஸ்தீன ஆணையத்தைச் சேர்ந்த மஹ்மூத் அப்பாஸ் உள்ளிட்ட 80 பேருக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது. அமைதி முயற்சிகளை பாதிக்கும் வகையில் அவர்கள் செயல்படுவதாக அமெரிக்கா கருதுகிறது.

7. கஜகஸ்தானின் ஷிம்கென்ட் நகரில் 16-ஆவது ஆசிய துப்பாக்கி சுடும் போட்டி நடைபெற்றது.

   i. 12 நாள்கள் நடைபெற்ற இப்போட்டியில் 50 தங்கத்துடன் இந்தியா வரலாற்றிலேயே முதலிடம் பெற்றது.

   ii. குறிப்பாக சீனியர் பிரிவில் ரைஃபிள், பிஸ்டல், ஷாட்கன் என 15 ஒலிம்பிக் பிரிவுகளில் சிறப்பாக செயல் பட்டனர். 6 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் வென்றனர்.

8. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**

   i. அன்டோனியோ குட்டெரெஸ் - ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர்
   ii. அர்ஜுன் பாபுதா - இந்திய துப்பாக்கி சுடும் வீரர்
   iii. ஜி ஜின்பிங் - சீன அதிபர்
   iv. ஷிகெரு இஷிபா - ஜப்பான் பிரதமர்